**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: **18.08.2025**
ஆசிரியர்,
ஐயா,

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.*

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பார்த்தீனியம் மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு முகாம்

ஒன்றிய அரசின் களை ஆராய்ச்சி இயக்குநகரத்தின் கீழ் செயல்படும் ஒருங்கிணைந்த களை மேலாண்மைத் திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 16 முதல் 22ம் தேதி வரை பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரமாக அனுசரிக்கப்படுகிறது. அதன்படி தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் களை மேலாண்மை பிரிவின் கீழ் விவசாயிகள், மாணவர்கள், பண்ணைத் தொழிலாளர்கள், சுகாதார பணியாளர்கள் போன்ற பல்வேறு தரப்பினருக்கும் பார்த்தீனியம் பற்றிய விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

இந்த விழிப்புணர்வு முகாம்களின் தொடக்க நிகழ்வாக ஆகஸ்ட் 16–ம் தேதி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கிழக்குப் பண்ணையில் மாணவர்களுக்கு பார்த்தீனியம் களை மேலாண்மை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியை பயிர் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) முனைவர்.என்.செந்தில் அவர்கள் முன்னிலையேற்று தொடங்கி வைத்தார். அவர் தனது தொடக்க உரையில், பார்த்தீனியத்தைக் கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும், பார்த்தீனியத்தால் ஏற்படும் தீமைகளையும் வலியுறுத்தினார். உழவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர்.ஆர்.கிருஷ்ணன் அவர்கள் பார்த்தீனியம் மேலாண்மை பற்றி சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியின் போது பார்த்தீனியத்தின் உயிரியல் கட்டுப்பாட்டிற்காக மெக்சிகன் வண்டுகளும் விடுவிக்கப்பட்டன.

இந்த விழிப்புணர்வு முகாமில் பார்த்தீனியம் களைச் செடி பற்றியும் அதன் நச்சுத் தன்மையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தும் முறைகளான உழவியல், இரசாயன மற்றும் உயிரியல் முறைகள் பற்றியும் தெரிவிக்கப்பட்டு அதனை சிறந்த முறையில் கட்டுப்படுத்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், பார்த்தீனியச் செடிகளைப் பூக்கும் முன் பிடுங்கி உரமாக்குதல் பற்றியும் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த விழிப்புணர்வு முகாமில் பேராசிரியர் மற்றும் களை மேலாண்மை பிரிவின் முதன்மை விஞ்ஞானி முனைவர். செ.ராதாமணி, களை மேலாண்மை பிரிவில் பணிபுரியும் முதுநிலை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் ஆகியோர் பங்கேற்று இந்த நிகழ்ச்சியை சிறப்புற நடத்தினர். இதன் தொடர் நிகழ்வாக ஆகஸ்ட் 22 வரை பல்வேறு இடங்களில் பார்த்தீனிய விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

**மக்கள் தொடர்பு அலுவலா்**